# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 117 | சனிக்கிழமை Saturday | 25.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# நீட் வினாத்தாள் கசிவில் ஈடுபட்டால்

# 10 ஆண்டுகள் சிறை... ரூ.10 கோடி அபராதம்

## புதிய திருத்த மசோதாவுக்கு பிரதமர் மோடி ஒப்புதல்



புதுடில்லி: பிரதமர் மோடி தலைமையில் டில்லியில் மத்திய அமைச்சரவை கூட்டத்தில் நீட் வினாத்தாள் கசிவு குறித்து முக்கிய ஆலோசனை நடந்தது. கூட்டத்தில் தேர்வு முறைகேடுகளை தடுக்க சட்ட திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடு விவகாரங்களுக்கு எதிராக மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிரதமர்நரேந்திரமோடியின் உத்தரவை தொடர்ந்து, 'பொதுத் தேர்வுகள் (முறைகேடுகளை தடுத்தல்) சட்டம், 2024'-ல் அதிரடியான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் வினாத்தாள் கசிவு வழக்குகளை விரைந்து விசாரிக்க துரித நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதுடன், குற்றவாளிகளுக்கு 3 மாதங்களுக்குள் தீர்ப்பும் தண்டனையும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், வினாத்தாள் கசிவு குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு அதிகபட்சமாக 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், ரூ.10 கோடி வரை அபராதமும் விதிக்கப்படும் வகையில் சட்ட திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

தற்போதுள்ள விதிகளின்படி 3 முதல் 5 ஆண்டுகள் வரை மட்டுமே சிறைத் தண்டனை வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போதைய இந்த சட்டம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான திருத்த மசோதா திங்கட்கிழமை மக்களவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது தற்போது நடைமுறையில் இருக்கும் பொது தேர்வுகள் (முறைகேடு வழிமுறைகள் தடுப்பு) சட்டம் 2024 சட்டத்தில் மத்திய அரசு திருத்தம் கொண்டு வரப்பட உள்ளது. தற்போது வினாத்தாள் கசிவு வழக்கில் குறைந்தபட்சம் 3 ஆண்டு முதல் 5 ஆண்டு வரை சிறையும், ரூ.10 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். ஆனால் இந்த புதிய சட்டத்தில் தண்டனை காலம் மற்றும் அபராதம் அதிகரிக்கப்பட உள்ளது. இதற்காக சட்ட நுணுக்கங்கள் பிரதமர் மோடியிடம் அதிகாரிகள் வழங்கி உள்ளனர். இதுபற்றி இன்றைய மத்திய அமைச்சரவை கூட்டத்தில் பிரதமர் மோடி விவாதிக்க உள்ளார். அதன்பிறகு அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் மசோதாவாக தாக்கல் செய்து நிறை வேற்றப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கவும், முறைகேடுகளை முழுமையாக ஒழிக்கவும் மத்திய அரசு எடுத்துள்ள இந்த அதிரடி நடவடிக்கைக்குத் தீவிர வரவேற்பு கிடைத்துள்ளது.

# மேகேதாட்டு அணை விவகாரம்: ஆகஸ்ட் 3ந் தேதி

# கர்நாடகா செல்கிறார் முதலமைச்சர் விஜய்






காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட கர்நாடகம் எடுக்கும் முயற்சிகளுக்கு தமிழ்நாடு அரசு எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த விவகாரத்தில் இரு மாநிலங்களுக்கும் இடையே மோதல்போக்கு நிலவி வருகிறது. கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை சரியாக பெய்யவில்லை.

இதனால் கே.ஆர்.எஸ். அணைஉள்ளிட்ட காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள அணைகள் நிரம்பவில்லை. குடிநீர் தேவைக்கு மட்டுமே நீரை பயன்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. அணைகளுக்கு நீர்வரத்து இல்லாததால், காவிரியில் தமிழகத்துக்கு தேவையான நீரை திறந்து விடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் டெல்லியில் நேற்று முன்தினம் நடந்த காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்திலும், 'பாசனத்திற்காக தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது' என கர்நாடக அரசு தெரிவித்துவிட்டது.

இந்த நிலையில், கர்நாடகா - தமிழகம் இடையில் உள்ள நீண்ட கால பிரச்சினையான காவிரி நதி நீர் பங்கீடு பற்றியும்; மேகதாதுவில் அணை கட்டுவது பற்றியும் விவாதிக்க கர்நாடக அரசின் நீர்ப்பாசன துறை அதிகாரிகள், தமிழக அரசின் நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதில், 'நதிநீர் பங்கீடு, மேகதாது அணை பற்றி பெங்களூரில் வருகிற 3-ம் தேதி, கர்நாடக - தமிழக முதல்- மந்திரிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தலாம்' என, அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளதாகவும் இதற்கு தமிழக அரசிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் வரவில்லை என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில், மேகதாது அணை விவகராம் தொடர்பாக முதல்-அமைச்சர் விஜய் வருகிற 3-ம் தேதி கர்நாடகம் செல்கிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வேளாண்துறை அமைச்சர் வினோத் கூறுகையில், "கர்நாடகாவில் 3-ம்தேதி நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்கிறார். கூட்டத்தில் தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரை காவிரியில் திறக்க வலியுறுத்தப்படும் மேகதாது அணையை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம், அது நமது உரிமை.

மழை பெய்யவில்லை. அதனால், காவிரியில் தண்ணீர் திறக்கவில்லை என்று கர்நாடகாதரப்பில் சொல்கிறார்கள்; இருந்தாலும், நமது உரிமைக்காக முதல்-அமைச்சர் விஜய் காவிரிதண்ணீரை கேட்டு பெறுவார் என்று கூறினார்.

# 'ஒரு நாள் அவகாசம் கோரிய மத்திய அரசு': தர்மேந்திர பிரதான்

# ராஜினாமா விவகாரத்தில் சி.ஜே.பி. உறுதியான நிலைப்பாடு



நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பான கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (CJP) அமைப்பின் கோரிக்கைகளுக்கு இணக்கமான தீர்வைக் காண்பதற்காக, அந்த அமைப்பின் செய்தித்தொடர்பாளர்களான சவுரவ் தாஸ் மற்றும் அசுதோஷ் ரங்கா ஆகியோருடன் மத்திய மந்திரிகள் ஜிதேந்திர சிங் மற்றும் ஜே.பி.நட்டா ஆகியோர் இன்று( வெள்ளிக்கிழமை, ஜூலை 24) டெல்லியில் உள்ள விட்டல்பாய் படேல் இல்லத்தில் சந்தித்தனர்.

இதனைத்தொடர்ந்து மத்திய மந்திரிகள் ஜெ.பி. நட்டா, ஜிதேந்திர சிங்குடன் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் நடத்திய பேச்சு வார்த்தை நிறைவடைந்தது.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கரப்பான் பூச்சி ஜனதா கட்சி செய்தித் தொடர்பாளர் அசுதோஷ் ரங்கா, "தர்மேந்திர பிரதான் பதவி விலகவேண்டும் என்ற எங்கள் கோரிக்கை குறித்து முடிவெடுக்க, நாளை மதியம் வரை அரசு அவகாசம் கோரியுள்ளது. அவர் விரைவில் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்று நாங்கள் நம்புகிறோம். அதேவேளையில், இழப்பீடு வழங்குதல் (தற்கொலை செய்துகொண்ட நீட் தேர்வு விண்ணப்பதாரர்களின் குடும்பங்களுக்கு) மற்றும் மாணவர்கள் மீதான முதல் தகவல் அறிக்கைகள் (FIR) மற்றும் சட்ட நடவடிக்கைகளைத் திரும்பப் பெறுதல் ஆகிய இரண்டு கோரிக்கைகளுக்கும் அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது" என்று கூறினார்.

அமைதியான முறையில் போராடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது மற்றும் சமீபத்திய தேர்வு முறைகேடுகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கப்படும் ஆகிய இரண்டு நிபந்தனைக்குட்பட்ட கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, சி. ஜே.பி. பேச்சுவார்த்தையில் ஈடுபட ஒப்புக்கொண்டது.

மத்திய அரசுடன் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் அல்லது அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று 'கரப்பான் பூச்சி ஜனதா கட்சி' (CJP) வலியுறுத்தி உள்ளநிலையில், மாணவர் போராட்டங்கள் தொடரும் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

முன்னதாக தனது முக்கிய கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் அளித்த உறுதிகளைத் தொடர்ந்து, சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக் தனது 26 நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று (வியாழக்கிழமை) நள்ளிரவில் முடித்துக்கொண்ட சில மணிநேரங்களுக்கு பிறகு இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஏற்கனவே வாய்மொழி உறுதிகள் அளிக்கப்பட்டபோதிலும், தான் ஒரு அதிகாரப்பூர்வ ஆவணத்தை வலியுறுத்தியதாலேயே போராட்டத்தை முடித்துக்கொள்வதில் இரண்டு நாட்கள் தாமதம் ஏற்பட்டதாக சோனம் வாங்சுக் தெரிவித்திருந்தார்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ம.குன்னத்தூர் கிராமத்தில் பரவும் டைபாய்டு காய்ச்சல்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ம.குன்னத்தூர் கிராமத்தில் தொடர்ந்து ஒரே பகுதியில் குழந்தைகள் பெரியவர்கள் என பலருக்கும் டைபாய்டு காய்ச்சல்

குடிநீரில் சாக்கடை கலந்துள்ளது என்று பொதுமக்கள் கொடுத்த புகார் கொடுத்ததின் பேரில் தண்ணீர் ஆய்வகத்துக்கு அனுப்புவதற்கு எடுக்கப்பட்டது பிறகு அப்பகுதியில் தொடர்ந்து காய்ச்சல் உள்ளவர்களுக்கு வேறு யாருக்கேனும் உள்ளதா என்பது குறித்தும் மருத்துவம் பார்க்கும் வகையில்

உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ம.குன்னத்தூர் கிராமத்தில் நடமாடும் மருத்துவ குழு மூலம் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் நடமாடும் மருத்துவ குழு மருத்துவ அலுவலர் முகமது ஷாகித் செவிலியர் நதியா, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் கார்த்திகேயன், சுகாதார ஆய்வாளர் தீன தயாளன், நடுநிலை சுகாதார பணியாளர் அட்சயா, பெண் சுகாதார தன்னார்வலர் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் என அனைவரும் பங்கேற்றனர் சமூக ஆர்வலர் சண்முகம் உடன் இருந்தார்

## ஆலங்குளம் டிபிவி திரையரங்கில் 'ஜனநாயகன்' திரைப்பட வெளியீட்டு விழா உற்சாகமாக நடைபெற்றது

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் டிபி வி திரையரங்கில் தமிழக முதல்வரும், தமிழக வெற்றி கழக தலைவருமான ஜோசப் விஜய் நடித்த 'ஜனநாயகன்' திரைப்படத்தின் வெளியீட்டு விழா உற்சாகமாக நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு டிடிவி திரையரங்கு முன்பு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் டி.பி.வி.வி. விபின் சக்கரவர்த்தி தலைமையில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ரசிகர்கள் இணைந்து கேக் வெட்டி கொண்டாடினர்.



மேலும், சமூக நலப் பணியாக இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ஒரு மூன்று சக்கர வாகனம் வழங்கப்பட்டதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு திரைப்பட வெளியீட்டு விழாவை சிறப்பித்தனர்.

## 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வக்ஃப் சொத்துக்கள் பதிவு செய்யப்படாத நிலை; தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு கவலை

### தூத்துக்குடி சம்சுதீன் அறிக்கை வெளியீடு



தமிழ்நாட்டில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வக்ஃப் சொத்துக்கள் புதிய UMEED இணையதளத்தில் இதுவரை பதிவு செய்யப்படாதது மிகுந்த கவலைக்குரியதாக உள்ளதாக தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு நிறுவனத் தலைவரும், தமிழ்நாடு-புதுச்சேரி வக்ஃப் சொத்துக்கள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு கமிட்டி மாநில ஒருங்கிணைப்பாளருமான தூத்துக்குடி சம்சுதீன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் அதிகளவிலான சொத்துக்களை கொண்ட அமைப்பாக வக்ஃப் வாரியம் இருந்து வருகிறது. "Once Waqf, Always Waqf" என்ற அடிப்படைக் கொள்கை நடைமுறையில் இருப்பதால், வக்ஃப் சொத்துக்கள் நிரந்தரமாக வக்ஃப் சொத்துக்களாகவே கருதப்படுகின்றன.

2025-ஆம் ஆண்டு ஜூலை 8-ஆம் தேதி அமலுக்கு வந்த வக்ஃப் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், முன்பு WAMSI இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த வக்ஃப் சொத்துக்கள், UMEED இணையதளத்தில் மீண்டும் பதிவு செய்யப்படவேண்டும்என்ற நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், இதற்கான போதிய விழிப்புணர்வை வக்ஃப் நிறுவனங்கள் மற்றும் முத்தவல்லிகளிடம் ஏற்படுத்துவதில் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அலட்சியம் காட்டியுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். தமிழ்நாட்டில் மொத்தம் 6,865 வக்ஃப் நிறுவனங்களும், 45,048 வக்ஃப் சொத்துக்களும் WAMSI தளத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், UMEED தளத்தில் இதுவரை 15,067 பதிவுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 8,015 பதிவுகள் மட்டுமே அதிகாரப்பூர்வ அங்கீகாரம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வக்ஃப் சொத்துக்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் உள்ளன என்றும், இது மிகுந்த கவலைக்குரிய சூழல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிரந்தர தலைமைச் செயல் அதிகாரி (CEO) நியமிக்கப்படாததும், வக்ஃப் நிர்வாக அனுபவம் இல்லாத நபர்கள் வாரியத்தில் நியமிக்கப்படுவதும் தற்போதைய நிலைக்கு முக்கிய காரணங்களாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வக்ஃப் தொடர்பான வழக்குகளில் தமிழக அரசு கால நீட்டிப்பு பெற்றுள்ள நிலையில், UMEED இணையதளத்தில் பதிவு செய்வதற்கான கூடுதல் அவகாசம் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பதிவு செய்யப்படாத வக்ஃப் சொத்துக்களை பாதுகாக்கதமிழகஅரசும், தமிழ்நாடு வக்ஃப் வாரியமும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வக்ஃப் சொத்துக்களை முழுமையாக பதிவு செய்து பாதுகாப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தூத்துக்குடி சம்சுதீன் வலியுறுத்தியுள்ளார்.



## மதுரை திருப்பரங்குன்றத்தில் உள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் 1997–2001 கல்வியாண்டு முன்னாள் மாணவர்களின் வெள்ளி விழா சந்திப்பு

மதுரை திருப்பரங்குன்றத்தில் உள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் 1997–2001 கல்வியாண்டு முன்னாள் மாணவர்களின் வெள்ளி விழா சந்திப்பு உற்சாகமாக நடைபெற்றது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு வெளிநாடுகளில் பணியாற்றி வரும் 200-க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் மீண்டும் கல்லூரியில் ஒன்று சேர்ந்தனர்.

கல்லூரியின் கே.எஸ். அரங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், சிவில், மெக்கானிக்கல் உள்ளிட்ட பல்வேறு பொறியியல் பிரிவுகளில் பயின்ற முன்னாள் மாணவர்கள் பங்கேற்று பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, தற்போது கல்லூரியில் பயிலும் ஏழைஎளிய மாணவர்களின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூ.1 கோடி மதிப்பிலான வளர்ச்சி நிதியை கல்லூரி நிர்வாகத்திடம் காசோலையாகவழங்கினர்.

மேலும், அடுத்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் தற்போது வழங்கிய தொகையை விட இரு மடங்கு அதிக நிதியை கல்லூரி வளர்ச்சிக்காக வழங்கும் இலக்குடன் செயல்பட உள்ளதாகவும் முன்னாள் மாணவர்கள் தெரிவித்தனர்.

முன்னாள் மாணவர்களின் இந்த நன்கொடை, கல்லூரியின் வளர்ச்சிக்கும், தற்போதைய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் பெரும் ஊக்கமாக அமையும் என கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது

## கோவையில் போக்குவரத்து காவல்துறையினர் ஏற்படுத்திய விழிப்புணர்வு!

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் அடுத்த ஒண்டிப்புதூர் பகுதியில் திரைப்படம் பார்க்க வந்த ரசிகர்களை நிறுத்தி, போக்குவரத்து விழிப்புணர்வு ஏற்படுத்திய போக்குவரத்து காவல்துறையினர்.

நல்லூர் காவல்நிலைய போக்குவரத்து உதவி ஆய்வாளர் பிரேம் குமார் தலைமையில் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள் சாலையில் வாகன இடையூறுகள் ஏற்படும், சிறுவர்கள் வாகனம் ஓட்டினால், பெற்றோர்களுக்கு என்ன தண்டனை உள்ளிட்ட பல்வேறு சாலை பாதுகாப்பு விதிமுறைகளை எடுத்து கூறினார். இதில் திறலாக கலந்து கொண்ட



கோவைமாநகரகாவல் ஆணையர் கண்ணன் உத்தரவின் படி, போக்குவரத்து துணை ஆணையர் அறிவுறுத்தலின்படி கோவை மாவட்டம் இ1 சிங்காநல்லூர் காவல் நிலைய பகுதிகளான, கோவை ஒண்டிப்புதூர் பகுதியில் உள்ள தனியார் திரையரங்குக்கு வந்திருந்த ரசிகர்கள் மத்தியில், சிங்காநல்லூர் ... வாகனங்களை இயக்கும் பொழுது சாலை விதிகளை எவ்வாறு கடை பிடிக்க வேண்டும், தலைக்கவசம் அணிவதால் ஏற்படும் நன்மைகள், தடை செய்ய பட்ட ஒன்வே சாலையில் செல்லும் பொழுது என்னென்ன தீமைகள் ஏற்படும், மது போதையில் வாகனங்களை இயக்கினால் ஏன்னேன்ன ரசிகர்கள், காவல்துறையினரின் இந்த விழிப்புணர்வை கேட்டு சாலைவிதிகளை முறையாக கடைபடிப்போம் என்று உறுதியளித்தனர் இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல்துறை உதவி ஆய்வாளர் மகாலிங்கம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீட் தேர்வை ரத்து செய்ய வடசேரியில் SFI, DYFI ஆர்பாட்டம்

கன்னியாகுமரி மாவட்டம் - நீட் தேர்வு முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று ஒன்றிய SFI மாவட்ட செயலாளர் தோழர்.சந்துரு தலைமையில் நடந்த இந்த ஆர்பாட்டத்தை ஆர்ப்பாட்டத்தின் நிறைவாக DYFI மாவட்ட செயலாளர்.விஷ்ணு நிறைவுரை ஆற்றினார். நீட்



கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திரபிரதான்பதவி விலக வலியுறுத்தி SFI, DYFI மாவட்டக்குழுக்கள் சார்பில் வடசேரி ஜீவா திடலில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

DYFI மாவட்ட துணைத் தலைவர்தோழர்காவ்யா துவக்கி வைத்து பேசினார். நிகழ்வில் DYFI நிர்வாகிகள் பிரவின், விபின் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். தேர்வு முறைகேடுகளை கண்டித்தும், தேர்வை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கை விடுக்க ப்பட்டது.

## கோவையில் தி சென்னை மொபைல்ஸ் சார்பில் ஆடி சிறப்பு சலுகை, ஸ்மார்ட் போன், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பர்னிச்சர் வாங்கிய வாடிக்கையாளர்களுக்கு 1 கிராம் தங்க நாணயம் வழங்கி அசத்தினர்




ஆடி மாதத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களை கவரும் வகையில், தி சென்னை மொபைல்ஸ் நிறுவனம் தமிழகம் முழுவதும் உள்ள தனது கிளைகளில் சிறப்பு தள்ளுபடி மற்றும் சலுகை திட்டங்களை அறிவித்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, ஸ்மார்ட் போன், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பர்னிச்சர் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 1கிராம் தங்க நாணயம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமாக, ஸ்மார்ட் போன், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் பர்னிச்சர் வாங்கிய வாடிக்கையாளர்கள் கவிதை எழுதி சமர்ப்பிக்க வேண்டும். அவற்றில் சிறந்த கவிதைகள் தேர்வு செய்யப்பட்டு, தேர்வாகும் வாடிக்கையாளர்களுக்கு பரிசாக 1 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

தமிழகம் முழுவதும் சுமார் ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கு 1 கிராம் தங்க நாணயங்களை வழங்கும் இந்தத் திட்டத்தின் முதல் கட்ட நிகழ்ச்சி, கோவையில் உள்ள புரூக்ஃபீல்ட்ஸ் வணிக வளாகத்தில், நடைபெற்றது. இதில் தேர்வு செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு 1 கிராம் தங்க நாணயங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் தி சென்னை மொபைல்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் சம்சு அலி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தேர்வு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக தங்க நாணயங்களை வழங்கி பாராட்டினார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது. ஆடி மாத சிறப்பு சலுகைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தரமான ஸ்மார்ட் போன், வீட்டு உபயோகபொருட்கள் மற்றும் பர்னிச்சர் சிறந்த விலையில் வழங்குவதோடு மட்டுமல்லாமல், அவர்களின் படைப்பாற்றலையும் ஊக்குவிக்கும் நோக்கில் இந்த தங்க நாணயத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களிடம் இந்த முயற்சிக்கு சிறப்பான வரவேற்பு கிடைத்துள்ளது, என்றார். மேலும், முதல் கட்டமாக கோவையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அடுத்த கட்டமாக தமிழகம் முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்படும் வாடிக்கையாளர்களுக்கு 1 கிராம் தங்க நாணயங்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## 'காவல் மரணம், விலைவாசி, மின்கட்டண உயர்வு' தவெக அரசுக்கு பிரேமலதா கண்டனம்

கடலூர்: "இது சினிமா கிடையாது. ரீல் ஹீரோ, ரியல் ஹீரோ ஆக வேண்டும் என்றால் சொன்ன வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும்" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தமிழக அரசின் நிலைப்பாடு, செயல்பாடு எப்படி இருக்கிறது என மக்கள்தான் பதில் சொல்ல வேண்டும். தொகுதிக்குச் சென்று ஆய்வு செய்கிறோம்; அதிகாரிகளிடம் பேசுகிறோம். ஒரு டெண்டரும் விடப்படவில்லை; எந்தவொரு அடிப்படை வேலைகளையும் ஆரம்பிக்கவில்லை. இது சீன் பண்ணுவதற்கோ, போட்டோ ஷீட் எடுப்பதற்கோ, ரீல்ஸ் போடவோ சினிமா கிடையாது. பல கோடி மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. அதை தவெக அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரிசி விலை அதிகரித்துள்ளது; நேற்று மட்டும் ஒரு டன் அரசி ரூ.15 ஆயிரம் உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வு குறித்து அரசுதான் சிந்திக்க வேண்டும். சும்மா சினிமா பாத்துக்கொண்டு, தியேட்டரில் உட்கார்ந்து அழுதுவிட்டு, சீன் போடுவது கிடையாது. இவை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. எல். நினோ பிரச்சினையால் தமிழகம் வறட்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. மத்திய, மாநில அரசுகள்தான் பஞ்சம், வறட்சி, விலைவாசி உயர்வு ஆகியவை இல்லாமல் மக்களை பாதுகாக்க வேண்டும்.

ஒருவரை காவல்நிலையத்துக்கு அழைத்துச் சென்றால், விசாரித்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துங்கள். தவறு இருப்பின் நீதிமன்றம் தண்டனை வழங்கும். காவல் மரணம் தொடரக் கூடாது. மக்கள் விரும்புவதை தான் சட்டங்களாகக் கொண்டுவர வேண்டும்.

நாங்கள் மக்கள் பக்கம் தான் இருப்போம். தமிழகத்தில் மின்வெட்டு நிலவுகிறது, மின்கட்டணம் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் ஒரு மாற்றமும் பார்க்க முடியவில்லை; அதே கண்துடைப்பு தான் நிகழ்கிறது. இது சினிமா கிடையாது. ரீல் ஹீரோ ரியல் ஹீரோ ஆக வேண்டும் என்றால் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது

# உயிரிழந்த இளைஞர் அருணாச்சலத்தின் உடல், அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைப்பு

தூத்துக்குடியைச் சேர்ந்த அருணாச்சலம் (24) என்ற இளைஞர் சட்டவிரோதமாக மதுபானம் விற்றதாகக் கூறி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். விசாரணைக்காக அழைத்துச் செல்லப்



பட்ட அவர், காவல் நிலையத்தில் வைத்து திடீரென உடல்நலக்குறைவு (வலிப்பு) ஏற்பட்டு மயங்கி விழுந்ததாகக் கூறி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 7 நாட்களாகத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அருணாச்சலம்,சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். காவல்துறையினர் கொடூரமாகத் தாக்கியதாலேயே அருணாச்சலம் உயிரிழந்தார் எனக் குற்றஞ்சாட்டி, அவரது குடும்பத்தினரும் உறவினர்களும் உடலைவாங்க மறுத்துத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் குறித்துத் தூத்துக்குடி குற்றவியல் நீதிமன்ற நடுவர் அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று தீவிர விசாரணை நடத்தினார். அதனைத் தொடர்ந்து, நெல்லை, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் குழு முன்னிலையில் இன்று காலை அருணாச்சலத்தின் உடற்கூறாய்வு தொடங்கியது. சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற இந்தச் செயல்முறை முழுவதும் முறைப்படி வீடியோ பதிவு செய்யப்பட்டது.

உடற்கூறாய்வு நிறைவடைந்ததைத் தொடர்ந்து,"இச்சம்பவம் குறித்து முழுமையாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என அருணாச்சலத்தின் குடும்பத்தினரிடம் நீதிபதி உறுதியளித்தார். நீதிபதியின் உறுதிமொழியை ஏற்றுக்கொண்ட குடும்பத்தினர், அருணாச்சலத்தின் உடலைப் பெற்றுக் கொண்டனர். பின்னர், அவரது உடல் பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டு மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

# ஆற்காடு அருகே குலதெய்வ வழிபாட்டின்போது குடிசை தீப்பிடித்து எரிந்தது - உயிர்சேதம் தவிர்ப்பு

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு



அடுத்த கீழ் குப்பம் கிராமத்தில் இருளர் சமூகத்தைச் வசித்து வருகின்றனர். இந்நிலையில், அவர்கள் வழக்கம்போல் குடிசை அமைத்து குலதெய்வ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். வழிபாட்டின் ஒரு பகுதியாக தீபம் ஏற்றி பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக குடிசையில் திடீரென தீப்பிடித்தது. தீ வேகமாக பரவி குடிசை முழுவதும் எரிந்து சேதமடைந்தது.

இந்த சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக எந்த வித உயிர்சேதமோ, காயமோஏற்படவில்லை. சம்பவம் குறித்து தகவலறிந்த பொதுமக்கள் தீயை அணைக்க முயற்சித்தனர்.

இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுரை வேலம்மாள் குளோபல் பள்ளியில் மாநில தடகள சாம்பியன்ஷிப் போட்டி

மதுரை வேலம்மாள் குளோபல் பள்ளியில்மாநில தடகள சாம்பியன்ஷிப் போட்டி வருமானவரித்துறை இணை ஆணையர் பீட்டர் ஜெரால்ட்,வேலம்மாள் குழும தலைவர் முத்துராமலிங்கம் தமிழ்நாடு தடகள செம்மலான தலைவர் லதாசெயலாளர் சிவகுமார் துவக்கி வைத்தனர் தமிழக தடகள சங்க தலைவர் லதாமதுரை சிந்தாமணியில் உள்ள வேலம்மாள் குளோபல் பள்ளியில் மாநில அளவிலான பள்ளிகளுக்கிடையேயான தடகளப் போட்டி வருகிற 24 முதல் 25 ஆகிய இரண்டு நாட்கள் வேலம்மாள் குளோபல் பள்ளி மைதானத்தில் நடைபெற உள்ளது.வேலம்மாள் குளோபல் பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட செயற்கை தடகள ஓடுதளத்தில் இப்போட்டிகள் நடைபெற உள்ளது.



தனர்.* தடகள போட்டியில்தேசியக்கொடி மற்றும் தடகள போட்டி கொடிகள் ஏற்றப்பட்டு அணிவகுப்பு மரியாதைக்கு பின் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது

4 பிரிவுகளில் 14 போட்டிகள் (24, 25 ) ஆகிய இரண்டு நாள் நடைபெற உள்ளது.

*மாநில அளவிலான தடகள போட்டியில் 500 க்கும் மேற்பட்ட பள்ளிகளில் 4000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.*

184 அரசு பள்ளிகளில் இருந்து 1200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்

24, 25 ஆகிய இரண்டு நாள் போட்டியானது,இளம் தடகள வீரர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச பள்ளிகளில் பங்கேற்க தங்கள் திறமையை வெளிப்படுத்தவும், மதிப்புமிக்க போட்டி அனுபவத்தைப் பெறவும், சிறந்து வழங்குவதன் மூலம், அடித்தள தடகளத்தை வலுப்படுத்தும் ஒரு மைல்கல் முயற்சியாகவும் அமையும் . பள்ளி மற்றும் மாவட்ட அளவில் நம்பிக்கைக்குரிய இளம் விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களின் திறமையை வளர்த்து, தமிழகம் மற்றும் இந்தியாவிற்கு ஒலிம்பிக் பெருமையைக் கொண்டுவரக்கூடிய எதிர்கால சாம்பியன்களை உருவாக்குதல் என்ற நீண்டகால தொலைநோக்குப் பார்வையால் இந்ததடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெறுகிறது.

இதில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 500 க்கும் மேற்பட்ட பள்ளிகளையும், 4,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளன. 4 வயதுப் பிரிவுகளில் (10, 12, 14 மற்றும் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள்/சிறுமிகள்) 76 போட்டிகளில் வீரர்கள் போட்டியிடுவார்கள். இது மாநிலத்தின் மிகப்பெரிய பள்ளி தடகள சாம்பியன்ஷிப் போட்டி இதுவாகும்.



# நந்தியாலம் பூஞ்சோலை நகரில் மாரியம்மன் இரண்டாம் வெள்ளி திருவிழா கோலாகலம்

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா அடுத்த நந்தியாலம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு பூஞ்சோலை மாரியம்மன் திருக்கோவிலில் இரண்டாம் வெள்ளி திருவிழா பக்தி பரவசத்துடன் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இத்திருவிழா, ஊரின் பெரியவர்கள் மற்றும் நாட்டாமைக்காரர்கள் தலைமையில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் திரளாககலந்துகொண்டு அம்மனை தரிசித்து அருள்பெற்றனர்.

திருவிழாகடந்த 4–ஆம் தேதிகொடியேற்றநிகழ்வுடன் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து தினமும் அம்மனுக்கு சிறப்புபூஜைகள்,தீபாராதனைகள் மற்றும் பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரண்டாம் வெள்ளியை முன்னிட்டு அதிகாலை மகா கணபதி வேள்வி நடைபெற்றது. பின்னர், வரசக்தி விநாயகர் ஆலயத்திலிருந்து பக்தர்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க, பக்தி கோஷங்களுடன் பால்குடங்களை சுமந்து ஊர்வலமாக புறப்பட்டனர். முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற இந்த பால்குட ஊர்வலத்தில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் என ஏராளமானோர் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

ஊர்வலம் பூஞ்சோலை மாரியம்மன் திருக்கோவிலை வந்தடைந்ததும், பக்தர்கள் கொண்டு வந்த பால்குடங்கள் மூலம் ஸ்ரீ அருள்மிகு பூஞ்சோலை மாரியம்மனுக்கு பால் அபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து அம்மனுக்கு சந்தனம், குங்குமம், மலர்கள் மற்றும் பல்வேறு திரவியங்களால் அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது.

அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று அம்மனை தரிசித்து, குடும்ப நலன், விவசாய வளம், மழை வளம் மற்றும் உலக நன்மைக்காக சிறப்பு பிரார்த்தனைகள் செய்தனர்.

திருவிழாவை முன்னிட்டு கோவில் வளாகம் மற்றும் சுற்றுப்புற பகுதிகள் வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மங்கள வாத்திய இசை,பக்தி முழக்கங்கள் மற்றும் ஆன்மிகச் சூழல் திருவிழாவிற்கு மேலும் சிறப்பூட்டியது.

விழாவின் நிறைவாக, கோவில் நிர்வாகம் மற்றும் விழாக்குழுவினர் சார்பில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் அன்னதானத்தை பெற்றுக் கொண்டு, விழா ஏற்பாடுகளை பாராட்டினர்.


இந்த இரண்டாம் வெள்ளி திருவிழா, பக்தர்களின் ஆன்மிக ஈடுபாட்டையும், ஊர் மக்களின் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் வகையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



★தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அ/மி சங்கரநாராயணசாமி திருக்கோவில் ஆடித்தபசு திருவிழா எதிர்வரும் 28.07.2026 செவ்வாய்கிழமை அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், ஆகியோர் 24.7.26 பார்வையிட்டு பக்தர்களுக்கு உணவு வழங்கினர்.

# மனித இதயத்திற்குள் குட்டி மூளை அமெரிக்க ஆராய்ச்சியில் ஆச்சரிய தகவல்

மனித இதயத்திற்குள் குட்டி மூளை போன்று நரம்பு மண்டலம் ஒன்று இயங்கி வருவதை அமெரிக்க பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



மனித உடலில் ரத்த ஓட்டத்திற்கு மிக முக்கிய காரணமான இதயத்திற்குள் குட்டி மூளை போன்ற ஒரு நரம்பு மண்டலம் இயங்கி வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட இந்த ஆராய்ச்சியில், இதயத்தைச் சுற்றி அமைந்துள்ள திசுக்களில், நரம்பணுக்களால் ஆன உள் இதய நரம்பு மண்டலம் செயல்படுவது தெரியவந்துள்ளது.

இதயத்தை பாதுகாக்கும் கட்டுப்பாட்டு மையம்

மூளையில் இருந்து உத்தரவு வரும் வரை காத்திருக்காமல், இந்த நரம்பணுக்கள் தங்களுக்குள் தகவல்களைப் வேகமாக பரிமாறிக்கொண்டு, இதயத் துடிப்பை முறைப்படுத்துவதோடு, உடலியல் மற்றும் மன அழுத்தத்தின்போது இதயத்தைப் பாதுகாக்கும் உள்ளூர் கட்டுப்பாட்டு மையமாகசெயல்படுகின்றன.

இந்த நரம்பு மண்டலத்தில் உள்ள குறிப்பிட்ட நரம்பணுக்கள், இதயத் துடிப்பு மிக வேகமாக அதிகரிக்கும்போது, அதைக் கட்டுப்படுத்தி இயல்பு நிலைக்குக் கொண்டுவர உதவுகின்றன.

புதிய மருத்துவ சிகிச்சை கண்டுபிடிக்க வாய்ப்பு

மனித இதயத்திலும் இதேபோன்ற நரம்பணு அமைப்புகள் இருப்பதால், இதய நோய்கள் மற்றும் சீரற்ற இதயத் துடிப்பு போன்ற பாதிப்புகளுக்கு புதிய மருத்துவச் சிகிச்சைகளைக் கண்டறிய இந்த மகத்தான கண்டுபிடிப்பு வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

# தமிழகத்தில் 8 மாவட்டங்களில் ஜூலை 28 வரை வெப்பநிலை 7 டிகிரி உயரும்



தமிழகத்தில் மதுரை, வேலூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் நாளை முதல் 28–ம் தேதி வரை வெப்பநிலை வழக்கத்தைவிட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறி ப்பில் கூறியிருப்பதாவது: குஜராத்திலிருந்து கர்நாடகா வரை சராசரி கடல் மட்டத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில்ஒரிருஇடங்களில்இடி,மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

28–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வேலூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிருஇடங்களில்வழக்கத்தைவிட7டிகிரிஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும். இதர தமிழகத்தில் வெப்பநிலை வழக்கமான அளவிலேயே இருக்கும். இதர தமிழகத்தில் ஒரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

# தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் டாம்கோ கடன் திட்டம் 2026, 2027

## ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்



தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சிறுபான்மையினர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் தனிநபர் கடன், சுய உதவி குழுக்களுக்கான சிறுதொழில் கடன், விராசாத் (கைவினை கலைஞர்களுக்கான கடன் திட்டம்) மற்றும் கல்விக் கடன் ஆகிய கடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வெவ்வேறு வருமானம் சார்ந்த பயனாளிகளுக்கு கடன் (ம) வட்டி விகிதங்களின் மாறுபட்ட அளவுடன் கூடிய திட்டம் 1–ல் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் கிராம / நகர்ப்புறங்களில் ரூ.3,00,000/– க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் திட்டம் 2 –ல் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் கிராம / நகர்ப்புறங்களில் ரூ.8,00,000/–வரை ஆண்டு வருமானம் இருக்கவேண்டும்.(திட்டம் 1–ன் கீழ் நன்மைகளை பெற முடியாத நபர்கள்) 1–ன் கீழ் தனிநபர் கடன் ஆண்டிற்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்ச கடனாக ரூ.20,00,000/–ம் திட்டம் 2–ன் கீழ் ஆண்களுக்கு 8%, பெண்களுக்கு 6% வட்டி விகிதத்திலும் அதிகபட்ச கடனாக ரூ.30,00,000 கடன் வழங்கப்படுகிறது. கைவினை கலைஞர்களுக்கு ஆண்களுக்கு 5%பெண்களுக்கு 4 % வட்டி விகிதத்தில் அதிகபட்ச கடனாக ரூ.10,00,000 கடன் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுக் கடன் நபர் ஒருவருக்கு ரூ.1,00,000/–ஆண்டிற்கு7%வட்டிவிகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. திட்டம் 2–ன் கீழ் ஆண்களுக்கு 10 %, பெண்களுக்கு 8% வட்டி விகிதத்திலும், நபர் ஒருவருக்கு ரூ.1,50,000/– கடன் வழங்கப்படுகிறது.

மேலும், சிறுபான்மையின மாணவ/ மாணவியர் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை /முதுநிலை தொழிற்கல்வி தொழில்நுட்பக்கல்வி பயில்பவர்களுக்கு அதிகபட்சமாக திட்டம் 1– ன் கீழ் ரூ.20,00,000/–வரையில் 3% வட்டி விகிதத்திலும், திட்டம் 2–ன் கீழ் மாணவர்களுக்கு 8 % மாணவியருக்கு 5% வட்டி விகிதத்திலும் ரூ.30,00,000/–வரையிலும் கல்வி கடனுதவி வழங்கப்படுகிறது. மேலும், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன் திட்டம்) கைவினை கலைஞர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் மூலப்பொருட்களான உபகரணங்கள் / கருவிகள்/ இயந்திரங்கள் வாங்குவதற்கு இக்கடன் வழங்கப்படுகிறது. எனவே சிறுபான்மையின மக்கள் இத்திட்டத்தை அதிக அளவில் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இம்மாவட்டத்தில் வசிக்கும் கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சியர்கள் மற்றும் ஜெயின் ஆகிய சிறுபான்மையின மக்கள் கடன் விண்ணப்பங்களை தங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகம் / மாவட்ட சிறுபான்மையினர் அலுவலகம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், மாவட்ட / மத்திய கூட்டுறவு வங்கி அல்லது அதன் கிளைகள் அல்லது நகர கூட்டுறவு வங்கி அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆகிய அலுவலகங்களில் பெற்று அதனை பூர்த்தி செய்து வங்கி கோரும் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடன் விண்ணப்பங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படவேண்டியபோதிய ஆவணங்கள்:

தனிநபர் கடன் திட்டம், சுய உதவி குழுக் கடன், விராசத் (கைவினை கலைஞர் கடன் திட்டம்)

சிறுபான்மையினர் மதச்சான்றிதழ், சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ். குடும்ப அட்டை அல்லது இருப்பிட சான்றிதழ், ஆதார் அட்டை, திட்ட அறிக்கை (கடன் தொகை ரூ.5,00,000/–க்கு மேல் இருப்பின்). வங்கிகள் கோரும் இதர ஆவணங்கள்.

கல்விக்கடன்

சிறுபான்மையினர் மதச் சான்றிதழ், வருமான சான்றிதழ் நகல், இருப்பிட சான்றிதழ் நகல், குடும்ப அட்டை, ஆதார் நகல், உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate) அசல், கல்விக் கட்டணங்கள் செலுத்திய இரசீது அசல் (Original), மதிப்பெண் சான்றிதழ் நகல், வங்கி கோரும் இதர ஆவணங்கள்.

# தவெக எம்.எல்.ஏ.விடம் குதிரை பேர புகார்: முன்ஜாமீன் உத்தரவாதத்தை தாக்கல் செய்தார் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி



சென்னை: தவெக எம்எல்ஏவிடம் குதிரை பேரம் நடத்திய வழக்கில், திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து முன் ஜாமீன் உத்தரவாதத்தை தாக்கல் செய்தார்.

சட்டப்பேரவையில் சபாநாயகருக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க, 35 கோடி ரூபாய் சன்மானம் தருவதாக, தன்னிடம் சிலர் பேசியதாக கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி தவெக எம்எல்ஏ இளையராஜா, சென்னை காவல் ஆணையரிடம் புகார் அளித்திருந்தார்.

இந்த புகாரின் அடிப்படையில் திருவல்லிக்கேணி காவல்துறை பதிவு செய்த வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மற்றும் அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோர் விசாரணைக்கு ஆஜராக காவல்துறை சம்மன் அனுப்பியது.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோர் முன் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை கடந்த 8-ம் தேதி விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.கே.இளந்திரையன் இருவருக்கும் நிபந்தனை முன் ஜாமீன் வழங்கினார். அதன்படி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து முன் ஜாமீன் வழங்கினர்.

சான்றளிக்கப்பட்ட உத்தரவு நகல் கிடைத்த 15 நாட்களுக்குள் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து ரூ.25000-க்கான சொந்த ஜாமீனும், அதே தொகைக்கான இரு நபர் ஜாமீனும் செலுத்த வேண்டும். மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை தினமும் காலை 10:30 மணி, மாலை 5:30 மணிக்கும் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும்.

விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இருவரும் வழக்கு விசாரணையின் போது தலைமறைவாகக் கூடாது. வழக்கு தொடர்பான ஆதாரங்கள், சாட்சிகளை கலைக்கக் கூடாது. நிபந்தனைகளை மீறினால் விசாரணை நீதிமன்றம் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என நிபந்தனை விதித்தார்.

இதனையடுத்து செந்தில் பாலாஜி, இன்று காலை 10.30 மணியளவில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்தார். உயர் நீதிமன்றம் உத்தரவின்படி ரூ.25 ஆயிரம் தொகைக்கு, இரு நபர் உத்தரவாதம் தாக்கல் செய்தார்.

பின்னர் பிற்பகல் 3 மணியளவில் வழக்கை விசாரணைக்கு எடுத்த முதன்மை அமர்வு நீதிபதி கார்த்திகேயன், செந்தில் பாலாஜியின் முன் ஜாமீன் உத்தரவாதத்தை ஏற்று கொண்டார்.

நாளை முதல் விசாரணை அதிகாரி முன் ஆஜராகி கையொப்பம் இட அனுமதித்தார் . காலை முதல் பிற்பகல் 3 மணி வரை நீதிமன்றத்தில் இருந்த செந்தில் பாலாஜி பின்னர் வீட்டுக்கு திரும்பினார். ல் மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை தினமும் காலை,மாலை இரண்டு வேலையும் விசாரணை அதிகாரி முன் ஆஜராகி கையொப்பம் இட வேண்டும். அசோக் குமார் வேறு வழக்கு காரணமாக கரூரில் இன்று உள்ளதால் வரும் திங்கள் கிழமை சரணடைந்து முன் ஜாமீன் உத்தரவாதம் தாக்கல் செய்ய உள்ளதாக தெரிகிறது.



# எஸ்400க்கு இணையாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குஷா ஏவுகணை சோதனை வெற்றி


புதுடெல்லி: ரஷ்யாவிடம் இருந்து எஸ் 400 ஏவுகணை களை இந்தியா வாங்கி உள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் இந்தியா, பாகிஸ்தான் இடையே நடைபெற்ற 4 நாட்கள் போரின்போது இந்த ஏவுகணைகள் இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தன.

எஸ் 400 ஏவுணை கவசத்தில் 40 கி.மீ, 120 கி.மீ. 250 கி.மீ. 400 கி.மீ. தொலைவு பாயும் ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன. இதன்மூலம் ஒரே நேரத்தில் 72 வான் இலக்குகளை துல்லியமாக தாக்கி அழிக்க முடியும். இந்த சூழலில் ரஷ்யாவின் எஸ் 400 ஏவுகணையை போன்று உள்நாட்டில் குஷா என்ற பெயரில் அதிநவீன ஏவுகணை கவசம் உருவாக்கப்பட்டு உள்ளது. மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) உருவாக்கிய இந்த ஏவுகணை கவசத்தில் 150 கி.மீ. 250 கி.மீ. 400 கி.மீ. தொலைவு பாயும் ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன.

ஒடிசாவின் அப்துல் கலாம் தீவில் குஷா ஏவுகணை சோதனை நேற்று நடத்தப்பட்டது. அப்போது தரையில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட வான் இலக்கை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தது.

அமெரிக்காவின் தாட், ரஷ்யாவின் எஸ்400 ஏவுகணை கவசத்துக்கு இணையாக இந்தியாவில் குஷா ஏவுகணை கவசம் உருவாக்கப்பட்டு உள்ளது. 2028-ம் ஆண்டில் இந்த ஏவுகணை கவசங்கள் இந்திய விமானப்படையில் சேர்க்கப்படும்.

# தொடர்ந்து 13வது இரவாக ஈரான் மீது தாக்குதல்: அமெரிக்க ராணுவம் தகவல்



புளோரிடா: ஈரான் மீது தொடர்ந்து 13-வது இரவாக அமெரிக்க ராணுவம் தாக்குதல் மேற்கொண்டதாக அந்நாட்டு ராணுவ மத்திய போர் கட்டளையகம் கூறியுள்ளது.

மேற்காசியாவில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

இடைக்கால போர் நிறுத்த உடன்பாட்டை மீறி ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய்க் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதால், அந்நாட்டின் மீது அமெரிக்க ராணுவம் கடந்த சில வாரங்களாக கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

ஈரானின் உள்கட்டமைப்புகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்நிலையில், தொடர்ந்து 13-வது இரவாக ஈரான் மீது தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது. ஈரானின் ராணுவ தளங்களை இலக்காக வைத்து மீண்டும் தாக்குதலை தொடுத்தோம். (இந்த தாக்குதல் இந்திய நேரப்படி இன்று அதிகாலை நடந்துள்ளது). தொடர்ந்து 13-வது இரவாக ஈரான் மீது இந்த தாக்குதலை நடத்தி உள்ளோம். ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்துக்கு அச்சுறுத்தலாக உள்ள ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் செயல்பாட்டை மட்டுப்படுத்தும் வகையில் இந்த தாக்குதலை மேற்கொண்டோம். இதற்கு ஈரான் தான் காரணம் என்று அந்நாட்டு ராணுவ மத்திய போர் கட்டளையகம் தெரிவித்துள்ளது. ஈரானின் துறைமுகங்களில் இருந்து சரக்கு கப்பல் வந்து செல்லவும் தங்கள் தரப்பில் தடுக்கப்பட்டுள்ளதக அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது.

"அமெரிக்காவின் வசம் உள்ள மற்றும் அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் ஈரானின் பணத்தை கொண்டு சேதமடையும் கப்பலுக்கு வழங்கப்படும். இதுவே நியாயமான மற்றும் சமமான செயலாகும்" என்று சமூக வலைதள பதிவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# மன்னார்குடி எம்எல்ஏ காமராஜை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்

## அமமுக சார்பில் சபாநாயரிடம் புகார்



சென்னை: மன்னார்குடி எம்.எல்.ஏ காமராஜை தகுதி நீக்கம் செய்யக் கோரி சபாநாயகரிடம் அமமுக சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்ற தேர்தலில் அமமுக சார்பில் மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட காமராஜ் வெற்றி பெற்றிருந்தார். 108 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றிருந்த தமிழக வெற்றிக் கழகம், ஆட்சி அமைக்க பெரும்பான்மை இல்லாத சூழலில் மற்ற கட்சிகளின் ஆதரவை நாடியது.

அந்த சூழலில் கடந்த மே 8-ஆம் தேதி இரவு திடீரென அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் டி.டி.வி தினகரன், தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அல்ரேக்கரை சந்தித்து, எங்கள் கட்சியின் எம்எல்ஏவை காணவில்லை என்று புகார் அளித்தார்.

மேலும், எம்எல்ஏ காணாமல் போனதற்கு காரணம் குதிரை பேரமாக இருக்கலாம். எனவே இதுகுறித்து விசாரிக்க வேண்டும் எனவும் டிடிவி தினகரன் கடிதம் வழங்கியிருந்தார். இதுதொடர்பாக காவல் நிலையத்திலும் அவர் புகார் அளித்திருந்தார். இந்நிலையில், மே-9 ஆம் தேதி டிடிவி தினகரனோடு செய்தியாளர்களை சந்தித்த காமராஜ், நேற்று (மே-8) செல்:.-போனை வீட்டில் மறந்து வைத்துவிட்டு சென்னை கிளம்பியதால், என்னை தொடர்பு கொள்வதில் சிக்கல் ஏற்பட்டதாகவும், நான் எங்கேயும் காணாமல் போகவில்லை எனவும் தெரிவித்தார்.


தொடர்ந்து மே-13ஆம் தேதி தவெக அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, கட்சி தலைமையின் முடிவுக்கு எதிராக காமராஜ் வாக்களித்தார். அதாவது தவெக அரசுக்கு ஆதரவாக அவர் வாக்களித்தார்.

இந்த சூழலில், அமமுக சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காமராஜ், கட்சி விதிகளை மீறி நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெகவிற்கு ஆதரவாக வாக்களித்ததால், அவர் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமமுக சார்பில் அக்கட்சியின் பொருளாளர் கரிகாலன் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரரை சந்தித்து மனு அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய பொருளாளர் கரிகாலன், "அமமுக மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் காமராஜ் நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, எங்கள் தலைவர் டி.டி.வி தினகரனின் அறிவுறுத்தலுக்கு மாறாக செயல்பட்டு, தவெகவிற்கு ஆதரவாக வாக்களித்ததால் அவர் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சபாநாயகர் இடம் புகார் மனு அளித்துள்ளோம். இதுகுறித்து அவர் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 10வது அட்டவணைப்படி (கட்சித் தாவல் தடுப்புச் சட்டம்) தலைவரின் வழிகாட்டுதலை சபையில் மீறும்போது, சம்பந்தப்பட்டவர் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கலாம். அதன் அடிப்படையில் தான் இன்று புகார் அளித்துள்ளோம். இந்த புகார் குறித்து பரிசீலிப்பதாக சபாநாயகர் கூறியுள்ளார்.

சட்டமன்ற உறுப்பினரை கட்சியை விட்டு நீக்கியது ஒழுங்கு நடவடிக்கைதான் தவிர மற்றபடி நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் வாக்களித்தது தவறு. அவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டு இருந்தாலும் எங்களுடைய சின்னத்தில்தான் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அந்த அடிப்படையில்தான் நாங்கள் புகார் அளித்துள்ளோம்" என்றார்.

# Prakash Raj calls Sonam Wangchuk 'conscience of the nation', thanks him for his sacrifice as he ends hunger strike




*Actor Prakash Raj has been one of the first celebrities to have shown support for the Cockroacj Janta Party protests. Ever since the Cockroach Janata Party (CJP) began their strike at Jantar Mantar over alleged examination irregularities for NEET, and activist Sonam Wangchuk began his hunger strike, Prakash made it clear that he stands 'in solidarity' with the cause and has even met Wangchuk.*

*On Thursday, Sonam broke his hunger strike after 26 days. He took to his X account and wrote, "Just now in the presence of Union Ministers Sh. JP Nadda, Dr. Jitendra Singh and the senior leaders of Apex Body of Leh Ladakh I finally broke my fast after 26 days. Earlier 65 members of parliament from different political parties had visited or signed letters urging me to break the fast. This was done after long negotiations on various conditions and in view of possible violence in the country. I will explain the conditions in detail in a separate video very soon. Meanwhile I urge you all to stay very vigillant about not allowing violence of any kind anywhere."*

*Prakash Raj reposted the tweet and wrote in the caption, "Thank you @Wangchuk66 sir for your sacrifice and for being the conscience of the nation.."*

*Earlier this month, Prakash had joined Wangchuk and the CJP for their protest at Jantar Mantar in New Delhi. Posting pictures with the activist, the actor wrote, "In solidarity with the youngsters of my country at #JantarMantar @ Wangchuk66 @Cockroachisback #justasking." The pictures show the actor addressing the protesters on-site, interacting with them, and posing for a picture with Wangchuk.*

*Visuals of him attending the protest march were all over social media. The actor has now taken to his X account to say he will continue to stand in solidarity with the Cockroach Janta Party and support its concerns. Prakash has been vocal in his support for CJP, demanding Union Education Minister Dharmendra Pradhan's resignation over alleged irregularities in the NEET paper.*

*Earlier, when the actor was asked about the silence of other Bollywood stars on the matter of the protests, he said that the world is watching. Speaking to PeekTV, Prakash said, "People who speak, the world is watching... who will stand by the people. Simple." When asked about being happy with the response from the industry, he said, "It is not the question of being happy. Now you know who is what. Such movements show who has got the integrity, who will stand for the people. Who am I to say? I can talk to myself. People have great voices, great actors... I wish they used it for this. They have not, people will judge! When history will be written tomorrow, they may forgive who might have made the mistake but they will never forgive who was silent."*

# சபரிமலை தங்கம் மாயமான வழக்கு: தேவஸ்வம் போர்டு முன்னாள் தலைவர் கைது



திருவனந்தபுரம்: சபரிமலை கோயிலில் தங்கம் காணாமல் போன வழக்கு தொடர்பாக திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டின் முன்னாள் தலைவர் பி.எஸ்.பிரசாந்த் நேற்று கைது செய்யப்பட்டார்.

கடந்த 2019-ல் சபரிமலை கோயில் கருவறை கதவு நிலைகள் மற்றும் துவார பாலகர் சிலைகளுக்கு மின் முலாம் பூசுவதற்காகத் தங்கத்தைக் கொண்டு சென்றபோது தங்கம் திருடப்பட்டதாக கூறி சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணையைத் தொடங்கியது.

2025-ல் தேவஸ்வம் போர்டு தலைவராக பிரசாந்த் இருந்தார். அப்போது, 2019-ல் நடந்த தங்கம் திருட்டை மறைப்பதற்காக பழுது இல்லாத துவார பாலகர் சிலைகளில் பழுது இருப்பதாகக் கூறி மீண்டும் அனுப்பி வைத்ததாகச் சிறப்பு புலனாய்வுக் குழு கேரள உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தேசிய உலோகவியல் ஆய்வகத்தின் அறிக்கை மூலம், இந்த வழக்கில் குற்றவாளிகள் தங்கம் திருடிய முறை மற்றும் சதித்திட்டம் குறித்த தெளிவான அறிவியல் பூர்வ ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று திருவனந்தபுரத்தில் உள்ள இல்லத்தில் வைத்து பிரசாந்தை சிறப்பு புலனாய்வுக் குழு கைது செய்தது. இதே வழக்கு தொடர்பாக தேவஸ்வம் போர்டின் முன்னாள் உறுப்பினர் அஜி குமார் மற்றும் திருவாபரண ஆணையர் ஆர்.ரெஜிலால் ஆகியோரிடமும் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

கைது செய்யப்படுவதற்கு முன் முகநூலில் பதிவிட்ட பிரசாந்த், தன் மீதான நடவடிக்கை முற்றிலும் அரசியல் உள் நோக்கம் கொண்டது என்றும், 2019-ல் நடந்த தங்கம் திருட்டை வெளிக் கொண்டு வந்ததே தங்கள் நிர்வாகம் தான் என்றும் கூறி தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.